


முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு திட்ட தொடக்க விழாவில், போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழி தமிழ்நாடு முழுவதும் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களால் ஏற்கப்பட்டு உலக சாதனை படைத்தமைக்காக வேர்ல்ட் ரிக்கார்ட்ஸ் யூனியன் அமைப்பின் நிர்வாகி அதற்கான சான்றிதழை வழங்கினார்.

## போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு திட்டம்

# கடமையை செய்ய தவறும் அதிகாரிகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, ஆக.12

**கடமையை செய்ய தவறும் அதிகாரிகள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.**

சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு திட்டத்தை தொடங்கி வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:–

தமிழ்நாட்டில் நாளுக்குநாள் போதை மருந்துகளின் பயன்பாடும் அதற்கு அடிமையாகிறவர்கள் எண்ணிக்கையும், அதிகமாகி வருவதை நினைக்கும்போது, எனக்கு கவலையும் வருத்தமும் அதிகமாகிறது. இதனை தடுக்க வேண்டுமானால் இரண்டு விதமான முறைகளில் நாம் சென்றாக வேண்டும்.

முதல் வழி, போதை மருந்து நடமாட்டத்தை கட்டுப்படுத்துவது. அதனை விற்பனை செய்பவர்களை கைது செய்வது. போதை மருந்துகளை பயன்படுத்த வேண்டாம் என்றும், அதனால் ஏற்படும் பாதிப்புகளை உணர்த்துவதும் இரண்டாவது வழி.

### விழிப்புணர்வு

முதல் வழி சட்டத்தின் வழி. இதனை அரசும் குறிப்பாக, காவல் துறையும் கவனிக்கும். இரண்டாவது வழி என்பது விழிப்புணர்வு வழி. பொதுமக்களும் இணைந்து செயல்பட்டால் மட்டும்தான் அத்தகைய விழிப்புணர்வை நம்மால் ஏற்படுத்த முடியும்.

கஞ்சா விளைவிப்பதை முற்றிலுமாக தடுத்தாக வேண்டும். பள்ளி, கல்வி நிறுவனங்களுக்கு அருகில் விற்கப்படுவதை தடுக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருக்கிறேன்.

அரசும் இது தொடர்பான சட்டங்களை கடுமையாக்குவதற்கு முடிவு எடுத்துள்ளது. சட்டங்களை திருத்த இருக்கிறோம். சிறப்பு கோர்ட்டுகளை அமைக்க இருக்கிறோம். போதை மருந்து விற்பவர்களது சொத்துகள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட இருக்கிறது. இதற்காக சைபர் செல் உருவாக்கப்பட உள்ளது.

### இன்டெலிஜென்ஸ் செல்

போதைப்பொருள் தடுப்பு பிரிவிற்கு என்று தனியாக ஒரு "இன்டெலிஜென்ஸ் செல்" ஏற்படுத்தப்பட இருக்கிறது. இதற்கான உறுதியை மாவட்ட கலெக்டர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் ஏற்றுக்கொள்ள இருக்கிறார்கள். இவை அனைத்தும் அரசாங்கத்தின் கடமை. இந்த நடவடிக்கைகளில் நான் சர்வாதிகாரியை போல செயல்பட்டு குற்றம் நடைபெறாமல் தடுப்பேன் என்றும் அதிகாரிகள் கூட்டத்தில் உறுதி அளித்திருக்கிறேன்.

கடமையை செய்ய தவறக்கூடிய அதிகாரிகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது தி.மு.க. ஆட்சியில் சட்டத்தின் ஆட்சிதான் நடக்கிறது. குற்றங்கள் குறைந்துள்ளன. குற்றவாளிகள் உடனுக்குடன் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு முறையான தண்டனையும் வாங்கி கொடுத்து கொண்டிருக்கிறோம்.

### ரூ.50 கோடி சொத்துகள் பறிமுதல்

அதிலும் குறிப்பாக, போதை மருந்து விற்பனை செய்யக்கூடிய குற்றங்களில் ஈடுபடக்கூடியவர்களை தனிப்பட்ட குற்றவாளிகளாக கருத முடியாது. இந்த சமுதாயத்தையே கெடுக்கக்கூடிய குற்றவாளிகள். சமூகத்தில் தீராத பெரும் நோயை பரப்பக்கூடிய குற்றவாளிகளாக அவர்கள் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு எந்தவித தயக்கமும் காட்டாது.

தி.மு.க. ஆட்சி அமைந்தது முதல் 41,625 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதுவரை 50 கோடி மதிப்பிலான சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் "திருடாதே" என்ற திரைப்படத்தில் ஒரு பாட்டை எழுதினார்கள். திட்டம் போட்டு திருடுற கூட்டம், திருடிக்கொண்டே இருக்குது அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்குது. திருடராய் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்று எழுதினார் பட்டுக்கோட்டையார்.

எந்த குற்றமாக இருந்தாலும், அதில் சட்டத்தின் பங்கு பாதிதான். குற்றவாளிகளின் மனமாற்றமானது பாதியளவு இருக்க வேண்டும்.

பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடுங்கள், அதனுடைய முடிவில் வெற்றி காத்திருக்கும். போதையால் மனப்பிரச்சினைகள் ஏற்படும். சட்டப்பிரச்சினையும் ஏற்படும். விலைமதிப்பு இல்லாத மனித உயிர்களை இப்படி ஒட்டுமொத்தமாக சிதைத்து கொள்ளக்கூடாது என்று கெஞ்சி கேட்டுக்கொள்கிறேன். மன்றாடி கேட்டுக்கொள்கிறேன்.

போதை என்பது அதனை பயன்படுத்தும் தனி மனிதனின் பிரச்சினை அல்ல. சமூகப்பிரச்சினை. பெற்றோர் தங்கள் பிள்ளைகளை போதைப்பொருளை பயன்படுத்தாமல் கண்காணிக்க வேண்டும். இதே கடமை பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கும் இருக்கிறது. வியாபாரிகள், கடைக்காரரர்கள் இதை விற்கமாட்டேன் என உறுதி எடுக்க வேண்டும்.

இந்த இரண்டு கைகளும் சேர்ந்தால்தான், போதையின் பாதையை நாம் தடுக்க முடியும். போதையுடன் கைகுலுக்காதீர். வாழ்க்கையே கை நழுவி போய்விடும். அழிவுப்பாதையை தடுக்கும் காவலர்களாக நீங்கள் மாற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# ஜம்மு–காஷ்மீரில் தமிழக ராணுவ வீரர் பலி: ஸ்டாலின் இரங்கல்; ரூ.20 லட்சம் நிதி உதவி



காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரர் ஒருவர் உள்பட 4 இந்திய ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்

சென்னை, ஆக.12–

ஜம்மு – காஷ்மீரில் பயங்கரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்த ராணுவ வீரர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழக வீரர் லட்சுமணன் குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

சுதந்திர தினம் நெருங்குவதை யொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்தநிலையில் காஷ்மீரில் ரஜவுரி மாவட்ட இந்திய ராணுவ முகாமின் வெளிப்புற கம்பி வேலியை உடைத்துக் கொண்டு 2 பயங்கரவாதிகள் உள்ளே நுழைய முயன்றனர். அப்போது, காவலுக்கு இருந்த ராணுவ வீரர்கள், அவர்களை பார்த்து விட்டனர். சரண் அடையுமாறு எச்சரிக்கை விடுத்தனர். அதை கேட்காமல், பயங்கரவாதிகள், உள்ளே நுழையும் நோக்கத்தில் கையெறி குண்டுகளை வீசினர். துப்பாக்கியாலும் சுடத் தொடங்கினர். சுதாரித்துக் கொண்ட ராணுவ வீரர்கள், எதிர் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில், தாக்குதலில் ஈடுபட்ட 2 பயங்கரவாதிகளும் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

இந்திய ராணுவ தரப்பில் 6 வீரர்கள் காயமடைந்தனர். அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி 3 ராணுவ வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். அவர்களில் இருவர் ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த 'சுபேதார்' ராஜேந்திர பிரசாத், அரியானா மாநிலத்தை சேர்ந்த 'ரைபிள்மேன்' மனோஜ்குமார் ஆவர்.

ஒருவர் தமிழ்நாட்டை சேர்ந்தவர் என்று தெரிய வந்துள்ளது. அவர் பெயர் லட்சுமணன். மதுரை டி. புதுப்பட்டியை சேர்ந்தவர். ராணுவத்தில் ரைபிள்மேனாக இருந்தார்.

இது தொடர்பாக, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி மற்றும் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

இன்று அதிகாலை (அதாவது நேற்று) காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரர் ஒருவர் உள்பட 4 இந்திய ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த துயரமும், வேதனையும் அடைந்தேன்.

தாய்நாட்டைக் காக்கும் அரிய பணியில் தன் இன்னுயிரைத் தியாகம் செய்து, வீரமரணமெய்திய ராணுவ வீரர்களுக்கு என் அஞ்சலியையும், வீரவணக்கத்தையும் சமர்ப்பிக்கின்றேன். வீரமரணம் எய்திய தமிழ்நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரர் லட்சுமணனின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களுக்கு ரூ.20 லட்சம் நிதியுதவி வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த நிஷாந்த் மாலிக் என்ற மேலும் ஒரு ராணுவ வீரர் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு உயிரிழந்தார். இதனால் இறந்தவர்கள் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது.


**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**
kotak Kotak Mahindra Bank
பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்பளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை – 400 051
கிளை அலுவலகம்: எண். 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை–600 006.

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

ஸ்மால் பிசினஸ் பின்கிரிடிட் இந்தியா பிரைவேட் லிமிடெட் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடனை ஒதுக்கியுள்ளது. ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 06.07.2022 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஈடுபெற்ற கடன்தாரரான திரு. சி. கஜேந்திரன் மற்றும் திருமதி ஜி. ரேவதி ஆகியோர் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண் PR00296754ன் கீழ் 08–08–2022 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.16,05,277/– (ரூபாய் பதினாறு லட்சத்து ஐந்தாயிரத்து இருநூற்றுஎழுபத்தேழு மட்டும்) மற்றும் 09.08.2022லிருந்து திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 22.09.2022 பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.25,50,000/– (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.2,55,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 21.09.2022 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்தின் விவரம்: 1062 சதுர அடி பரப்பில் உள்ள நிலம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும் மற்றும் கட்டிடம். மனை எண். 19, ஆறுமுக நகர், திருவேனி நகர் விரிவு, எண். 46, ஒத்தியம்பட்டு கிராமம், ரீசர்வே எண். 35/3, கடாஸ்டர் எண். 427.2/3, 427.3/3 மற்றும் 426. எல்லைகள்: வடக்கில்: மனை எண். 20, தெற்கில்: மனை எண். 18, கிழக்கில்: தெரு மற்றும் மேற்கில்: ரீசர்வே எண். 35/3.

அளவு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 52 அடி 9 இஞ்ச், கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 53 அடி 6 இஞ்ச், வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 20 அடி மற்றும் வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 20 அடி. பாண்டிச்சேரி பதிவு மாவட்டம் மற்றும் வில்லியனூர் சார்பதிவு மாவட்ட எல்லையில் அமைந்துள்ளது.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை செய்யப்பட உள்ள ஈடுபெற்ற சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. ராஜேந்தர் தஹியா (+91 8448264515), திரு. நாகராஜ் கே (+91 8296621749), திரு. சியாம் நம்பூரி (+91 9677288418) & திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html and/or on https://bankauctions.inல் பார்வையிடலாம்.

தேதி : 12–08–2022 இடம் : பாண்டிச்சேரி
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டுக்காக, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி



**VEHICLE FOR SALE**

TN 06 W 6808 (without RC) YOM 2018
TATA SFC407CH
TN 22 DT 5631 (with RC) YOM 2021
EICHR_VECV PRO_2075_

Under hypothecation with
**M/s.KOTAK MAHINDRA BANK LTD,**
is under sale in its
"As is where is Condition"
Interested parties can give their Quotations within 3 days at

**KOTAK MAHINDRA BANK LIMITED**
Old Mahabalipuram Road,
Kandhanchavadi, Chennai-600096
Ph: 044 - 6624 8568



**பொது அறிவிப்பு**

கோட்டக் மகேந்திரா வங்கிக்கு பிணையமாகியுள்ள கீழ்கண்ட வாகனம் ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளது.

Non Registerable Asset
CB_HYDRAULIC_EXCAVATOR_ZX_140_TELCON
THEDA0L0P00001198 - YOM: 2019
நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலை: ரூ.22,50,000/-

கோட்டக் மஹிந்திரா வங்கி லிமிடெட்

வங்கியிடம் பிணைவைக்கப்பட்ட வாகனம் "எப்படி உள்ளதோ அதே நிலையில்" என்கிற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

ஏலத்தில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் தங்களின் விலை குறிப்பீடுகளை (ஆன்லைன் / ஆப்லைன்) மூலம் இந்த விளம்பரம் வெளிவந்த 15 நாட்களுக்குள் அதாவது 26.08.2022 தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கொடுக்கலாம்

கிளை முகவரி:
கோட்டக் மஹிந்திரா வங்கி லிமிடெட்
8-வது தளம், மண்டலம் 2,
TVH அக்னிடியோ பார்க், OMR ரோடு,
எண்.141, ராஜீவ் காந்தி சாலை,
கந்தன்சாவடி, சென்னை-600096
(அல்லது)
தொடர்புக்கு: செந்தில் செல்வன் சுப்ரமணியன்,
கோட்டக் மஹிந்திரா வங்கி லிமிடெட்
போன்: 044-6624 8624 / 044-6624 8044
மின் அஞ்சல்: senthil.subramanian@kotak.com


**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE AT CHENGALPATTU**
**OS No.123 OF 2020**

Gopu Rama Naidu
S/o K.Rama Naidu
Number 14/20, 2nd Avenue
Sundar Nagar, Guindy Industrial Estate, Chennai600032
Represented herein by his Authorised Power of attorney Agent S.Sarath babu. Aged about 31 years
S/o. Srikanth 266, sasthri street, Thiruvengadapuram
Ponneri, Tamil Nadu 601 204
... Plaintiff

Vs

Defendant 2- Mr.N.Bharathirajan
S/o. Narasimhan
31/33, Big street, vettankulam
Nemeli, Arakkonam
Vellore- 631051
Defendant 3- Mr.M.Dillibabu,
S/o. Manickam
71, 3rd Street, hyder Garden
Otteri, Perambur Barracks
Chennai 600012
... Defendants 2 & 3

NOTICE TO DEFENDANTS 2 & 3

Please take notice that the Plaintiff has filed Original Suit No.123 of 2020 before the Honourable Principal District Judge Court at Chengalpattu and the said matter stands posted for hearing on 07.09.2022 for your appearance. You are hereby directed to appear before the court either in person or by a duly authorized agent or representative and in default of your appearance on the said 07.09.2022 the said matter will be heard and determined in your absence.

C.P. Hemkumar,
Advocate
M/s Ganesh & Ganesh
Counsel for Plaintiff

**கே.சி.பி.சுகர் அண்டு இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
K C P SUGAR AND IND COR
பதிவு அலுவலகம் : 'இராமகிருஷ்ணா பில்டிங்ஸ்', எண்.239, அண்ணாசாலை, சென்னை - 600006
CIN: L15421TN1995PLC033198
Tel: 044 - 28555171 - 176 / Fax: 044 - 28546617 / e-mail: secretarial@kcpsugar.com / www.kcpsugar.com

**EXTRACT OF THE STANDALONE AND CONSOLIDATED UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30.06.2022 PURSUANT TO REGULATION 47 OF SEBI (LODR) REGULATIONS, 2015**

(ரூபாய் லட்சத்தில்) பங்கு ஒன்றுக்கான விவரங்கள் தவிர

| வ. எண். | விவரங்கள் | தனி தன் நிதிநிலை முடிவு | | | கூட்டு நிதிநிலை முடிவு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முடிவடைந்த காலாண்டு | | முடிவடைந்த ஆண்டு | முடிவடைந்த காலாண்டு | | முடிவடைந்த ஆண்டு |
| | | 30.06.2022 (தணிக்கை செய்யப்படாத) | 30.06.2021 (தணிக்கை செய்யப்படாத) | 31.03.2022 (தணிக்கை செய்யப்பட்ட) | 30.06.2022 (தணிக்கை செய்யப்படாத) | 30.06.2021 (தணிக்கை செய்யப்படாத) | 31.03.2022 (தணிக்கை செய்யப்பட்ட) |
| 1. | மொத்த வருமானம் | 5277.16 | 6577.41 | 28264.48 | 7569.40 | 7482.85 | 33543.52 |
| 2. | வரிக்கு, விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு முன் நிகரலாபம் / (நஷ்டம்) | (1034.94) | 586.84 | (259.92) | (292.06) | 696.85 | 515.37 |
| 3. | வரிக்கு முன் ஆனால் விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு பின் நிகரலாபம் / (நஷ்டம்) | (1034.94) | 586.84 | (259.92) | (292.06) | 696.85 | 515.37 |
| 4. | வரி மற்றும் விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு பின் உள்ள நிகரலாபம் / (நஷ்டம்) | (1094.89) | 725.18 | (174.09) | (566.97) | 815.39 | 357.74 |
| 5. | நிறுத்தப்பட்ட செயல்பாடுகளின் மூலம் லாபம்/ (நஷ்டம்) | 424.28 | 48.76 | – | 424.28 | 48.76 | – |
| 6. | மற்ற விரிவான வருமானம் | – | – | (18.43) | (17.58) | 67.96 | (46.11) |
| 7. | மொத்த விரிவான வருமானம் [உள்ளடங்கியது காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம்] | (670.61) | 773.94 | (192.52) | (160.27) | 932.11 | 311.63 |
| 8. | மொத்த பங்குத் தொகை (ஒரு பங்கிற்கு முக மதிப்பு ரூ.1) | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 |
| 9. | ஒரு பங்கின் ஈட்டுத் தொகை | | | | | | |
| | - அடிப்படை & நீர்த்த - தொடரும் செயல்பாடுகள் | (0.97) | 0.64 | (0.17) | (0.52) | 0.78 | 0.27 |
| | - அடிப்படை & நீர்த்த - நிறுத்தப்பட்ட செயல்பாடுகள் | 0.37 | 0.04 | – | 0.37 | 0.04 | – |
| | - அடிப்படை & நீர்த்த - தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள் | (0.60) | 0.68 | (0.17) | (0.15) | 0.82 | 0.27 |

குறிப்புகள்:
1. சர்க்கரைத் தொழில் ஒரு பருவகால தொழில் மற்றும் முக்கியமாக சுழற்சியின் தன்மை கொண்டதாக இருப்பதால், மேற்கூறிய முடிவுகளை நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருடாந்திர செயல்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் லாப குறிகாட்டியாகவோ அல்லது காலாண்டுக்கு இடையிலான ஒப்பீடாகவோ கருதமுடியாது.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், இந்திய நிறுவனச் சட்டம், 2013, பிரிவு 133-ல் பரிந்துரைக்கப்பட்ட Companies (Indian Accounting Standards) Rules, 2015-ன் படியும் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் வழக்கம் மற்றும் கொள்கைகள் படியும் கணக்கிடப்பட்டது.
3. மேற்கண்ட தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு 11.08.2022 அன்று நடந்த இயக்குநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.
4. தணிக்கையாளர் மூலம் மேற்கண்ட தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகள் வரையறுக்கப்பட்ட தணிக்கை செய்யப்பட்டு, அவர்களது அறிக்கை 11.08.2022 அன்று நடைபெற்ற இயக்குநர் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
5. இந்த நாளிதழ் வெளியீடு, SEBI (LODR) Regulations, 2015, விதி 33-ன் படி பங்குச் சந்தைகளுக்கு அனுப்பியுள்ள தகவலின் சுருக்கமே ஆகும். இதன் விரிவான காலாண்டு தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகளை பங்கு சந்தைகளின் (NSE / BSE) வலைதளங்களான www.nseindia.com மற்றும் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் வலைதளமான www.kcpsugar.com ஆகிய வலைதளங்களில் காணலாம்.

கே.சி.பி.சுகர் அண்டு இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டிற்காக
Sd/-
கிரண் வெலகாபுடி
இயக்குநர்
இயக்குநர் குழுவின் ஆணைப்படி
இடம்: சென்னை
தேதி: 11.08.2022

**சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்**
CIN:L51100TN1982PLC124332
பதிவு அலுவலகம்: எப்1 சி2, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை – 600 117 (தமிழ்நாடு)
போன்: 044-29871174 | Email: cs@sayajigroup.com | Website: www.sayajihotels.com

**30 ஜூன் 2022–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(இந்திய ரூபாயில் லட்சத்தில் இபிஎஸ் தவிர)

| வ. எண். | விவரங்கள் | தனியானது | | | ஒருங்கிணைந்தது | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு 30.06.2022 (தணிக்கை செய்யாதது) | முடிந்த காலாண்டு 30.06.2021 (தணிக்கை செய்யாதது) | முடிந்த காலாண்டு 31.03.2022 (தணிக்கை செய்தது) | முடிந்த காலாண்டு 30.06.2022 (தணிக்கை செய்யாதது) | முடிந்த காலாண்டு 30.06.2021 (தணிக்கை செய்யாதது) | முடிந்த காலாண்டு 31.03.2022 (தணிக்கை செய்தது) |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் (நிகரம்) | 5,967.77 | 1,030.57 | 16,106.44 | 6,022.42 | 1,053.45 | 16,314.92 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 2,282.14 | (848.01) | 3,369.27 | 1,246.51 | 3,842.29 | 1,249.07 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 2,282.14 | (848.01) | 3,369.27 | 1,246.51 | 3,842.29 | 5,610.31 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 1,526.53 | (586.37) | 2,646.12 | 964.44 | 2,203.89 | 3,305.28 |
| 5 | காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் /(நஷ்டம்) (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானத்தை (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 1,543.04 | (569.82) | 2,760.65 | 954.71 | 2,188.45 | 3,365.52 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1,751.80 | 1,751.80 | 1,751.80 | 1,751.80 | 1,751.80 | 1,751.80 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. | - | - | 6,744.64 | - | - | 19,734.78 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | | |
| | அடிப்படை | 8.71 | (3.52) | 14.53 | 5.51 | 12.41 | 18.18 |
| | டைலூடட் | 8.71 | (3.52) | 14.53 | 5.51 | 12.41 | 18.18 |

குறிப்பு
அ. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு/ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு/ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளம் (www.sayajihotels.com)ல் உள்ளது.

குழு உத்தரவுப்படி
சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
இஷா கர்க்
சேர்மன்
இடம்: இந்தூர்
தேதி: 10.08.2022

**Expleo Solutions Limited**
( expleo )
CIN No:L64202TN1998PLC066604
Registered & Corporate office : 6A, Sixth Floor, Prince Infocity II, No. 283/3 & 283/4, Rajiv Gandhi Salai (OMR), Kandanchavadi, Chennai-600 096, INDIA.
Website: www.expleosolutions.com; Tel:+91 44 4392 3200

**CONSOLIDATED UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2022**

(Rs. In Millions)

| S. No. | Particulars | Quarter ended 30-Jun-22 (Unaudited) | Year ended 31-Mar-22 (Audited) | Quarter ended 30-Jun-21 (Unaudited) |
|---|---|---|---|---|
| 1 | Total Income from Operations | 1,274.41 | 4,045.10 | 880.34 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional items) | 225.64 | 721.45 | 169.73 |
| 3 | Net Profit / (Loss) for the period before Tax (after Exceptional items) | 225.64 | 721.45 | 169.73 |
| 4 | Net Profit/ (Loss) for the period after tax (after Exceptional items) | 171.65 | 539.04 | 128.12 |
| 5 | Total Comprehensive Income for the Period [comprising Profit for the period after tax and Other Comprehensive (Income after tax)] | 177.11 | 533.35 | 130.01 |
| 6 | Equity Share Capital | 102.52 | 102.52 | 102.52 |
| 7 | Reserves (excluding Revaluation Reserves) as shown in the Audited Balance Sheet of the previous year | 2,449.46 As at March 31, 2022 | 2,449.46 As at March 31, 2022 | 1,916.11 As at March 31, 2021 |
| 8 | Earnings per Equity Share (Face value of Rs.10/- each) (for continuing operations) | | | |
| | - Basic (Rs.) | 16.74 | 52.58 | 12.50 |
| | - Diluted (Rs.) | 16.74 | 52.58 | 12.50 |

Note:
1 The above is an extract of the detailed format of Quarterly Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results are available on the Stock Exchange(s) websites of NSE (www.nseindia.com), BSE (www.bseindia.com) and also in our Company's website (www.expleosolutions.com).

3 Additional information on Standalone Unaudited Financial Results :

| Particulars | Quarter ended 30-Jun-22 (Unaudited) | Year ended 31-Mar-22 (Audited) | Quarter ended 30-Jun-21 (Unaudited) |
|---|---|---|---|
| Net Sales / Income from Operations | 1,274.41 | 4,045.10 | 880.34 |
| Profit/ (Loss) from ordinary activities before tax | 205.35 | 672.63 | 150.41 |
| Net Profit/ (Loss) from ordinary activities after tax | 155.15 | 498.31 | 111.44 |
| Total Comprehensive Income for the period | 159.92 | 490.09 | 112.61 |

By order of the Board
For Expleo Solutions Limited
Balaji Viswanathan
Managing Director & CEO
Place: Chennai
Date: August 11, 2022

**விவ்ரிடி கேபிடல் பிரைவேட் லிமிடெட்**
CIN-U65929TN2017PTC117196
பதிவு அலுவலகம் : 2வது தளம், பிரஸ்டீஜ் பாலிகான், எண்.471, அண்ணா சாலை, நந்தனம், சென்னை 600035.

**ஜூன் 30, 2022 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**
[செபி (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்), (எல்ஓடிஆர் ஒழுங்குமுறைகள்) விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]

(₹ லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | ஜூன் 30, 2022ல் முடிவடைந்த காலாண்டு / ஆண்டு (தணிக்கை செய்யப்படாதது) | ஜூன் 30, 2021ல் முடிவடைந்த காலாண்டு / ஆண்டு (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31, 2022ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 13,645.90 | 6,779.72 | 34,487.19 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்) | 3,920.69 | 1,894.40 | 9,064.05 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்) | 3,920.69 | 1,894.40 | 9,064.05 |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும் / அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்) | 2,914.11 | 1,396.85 | 6,736.98 |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 2,457.28 | 1,455.65 | 6,665.93 |
| 6. | செலுத்தப்பட்ட ஈக்விடி பங்கு மூலதனம் | 1,695.54 | 1,189.04 | 1,252.24 |
| 7. | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | 13,676.59 | 5,525.02 | 11,099.51 |
| 8. | பங்கு பிரீமியம் கணக்கு | 120,843.65 | 66,367.10 | 98,523.76 |
| 9. | நிகர மதிப்பு | 145,217.98 | 81,431.33 | 119,614.66 |
| 10. | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 366,360.75 | 145,028.16 | 355,013.38 |
| 11. | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | - | 8.11 | 8.11 |
| 12. | கடன் ஈக்விடி விகிதம் | 2.37 | 1.78 | 2.76 |
| 13. | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) | | | |
| | 1. அடிப்படை | 18.51 | 8.80 | 41.36 |
| | 2. டைலூட்டட் | 3.08 | 1.65 | 7.22 |
| 14. | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil | Nil |
| 15. | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | Nil | Nil | Nil |
| 16. | கடன் சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA |
| 17. | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA |

குறிப்பு :
1. செபி (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் மற்றும் பட்டியலிடப்பட்ட நிறுவன இணையதளத்தில் உள்ளது. (BSE: www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivriticapital.com).
2. செபி (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி கேபிடல் பிரைவேட் லிமிடெட்டுக்காக
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
இடம் : சென்னை
தேதி : 10 ஆகஸ்டு 2022